உ

கடவுள் துணை.

கள்ளப்புருஷன் ஆசையினல்

தன் பிள்ளையைக்கொன்ற

# கனகம்மாள் சிந்து.

இஃது

சிறுமணவூர் வித்துவான் மகா-ள-ள-ஸ்ரீ

முனிசாமிமுதலியார் அவர்களின் மாணவரினல்

இயற்றப்பட்டு

பொள்ளாச்சி

விவேகானந்தா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை அணு 1.

024.

234

O-,1MMM4,K

A124

181332

## காப்பு வெண்பா.

சோரப்புருஷனினால் சுந்திர சேயைக் கொன்ற
நாரி கனகம்மாளின் நாசக்கதையைத்—தாரணியி
லோதுதற்கு நீதியுடன் உள்ளம் நம்பி
ஆதி பகவானே அருள்.

அனியாயம் பாரீர்

அனியாயம் அனியாயம் தனியாகப் பையனை
துணிவாயிருவரும் கொலைசெய்து புதைத்திட்ட

அனியாயம் பாரீர்

ஐதாராபாக்கத்தில் மூசாந்தியோராம்
ஐயர்னாகுலம்பாமே நகர்தனிலிருப்போராம்
பயபக்தியுடனே வியாபாரம் போறும்
பாலகன் கிருஷ்ணனை குமாஸ்தாவராய் வைத்தாராம்
செட்டியின் மனைவி அந்த

குமாஸ்தாவின் கைவசம் ஆனாளே துணைவி

ரங்கைய செட்டியார் சந்தைக்குப் போனாராம்
ர்ராஜன்போல் கிருஷணனும் கடைதனி லிருந்தானும்
மாது குமாஸ்தாவைக் கண்ணாலே கண்டாளாம்
மாது கனகமமாள் கைகாட்டி அழைத்தாளாம்
இருவரும் கூடி அந்த

வீட்டிற்குள்ளே சென்று பரியாசம் பாடி

சரசசல்லாபமாய் இருவரும் இருக்கையில்
சந்தோஷமாய் மகன் வீட்டிற்குள் வருகையில்
கோரமாய் தாயாரும் கூடியிருக்கையில்
பையனும் கண்ணாலே நேரிடப் பார்க்கையில்
கோபத்தைக் கொண்டு அந்த

தாயாரைப் பார்த்திவன் சொல்லுவான் விண்டு

எமம்மா இதி அந்த மஞ்சிது காதம்மா
நாயப்பா சூசித்தே நரிக்கிவேஸ்துடம்மா
நம்மித்தே செடிப்போதி நியாயத்ர காதம்மா
நேன் சூசினேனே இத்தரு னூசூசி

கூர்ச்சிக்குண்ளேனே

அம்மா லோப்பிலே உண்டேதி எவரம்மா செப்பிடு
செப்பித்தே நேன் ஒச்சே போன்சேசுனிப்புடு
அப்பா ஒச்சேனனு செப்புத்தானிப்புடு

இது முந்திரானு ஈஸ்வரடு சாக்ஷி இண்டிலே ரானு

...ம்பா குமாஸ்தாவும் வீட்டிற்குள் குந்திக்கொண்டிருந்தானும்
கூச்சமிடாமலே மறைந்துகொண்டிருந்தானும்
சமைத்ததோர் பலகாரம் சாதமும் போட்டாளாம்
ஜாடையாய் கிருஷ்ணனும் கூடத்தில் குந்தியே
சாப்பிட்டானிவனும் அந்த
பிள்ளையைச் சாப்பிடக் கூப்பிட்டாள் இவளும்
ஐயோ பிள்ளையை வெட்டவே எண்ணங்கள் கொண்டாராம்
புழக்கடையோரமாய் பள்ளமுந் தோண்டினாராம்
ஜாடையாய்க் கனகம்மாள் கதவையும் மூடினாளாம்
தடிப்பையன் குமாஸ்தாவும் தடியாலே அடித்தானும்
பதைபதைத்தானும் அந்தப்பையன்
புழக்கடையில் துடிதுடித்தானும்
ஐயோ பிள்ளையை வெட்டியே பள்ளத்தில் போட்டாராம்
பாவி இருவரும் கையைக் கழுவினாராம்
தீரமாய் இருவரும் வீட்டில் நுழைந்தாராம்
இருவரும் கூடி இனிமேல் நமக்கொரு பயமில்லை போடி
அப்போ செட்டியார் வளர்த்ததோர் கிளிப்பிள்ளை இருந்ததாம்
செய்த கொலைதனை பார்த்துக் கொண்டிருந்ததாம்
வெட்டினார் அண்ணனை வீணுக்கு என்றதாம்
விபரமாய் செய்தியை சொல்லலாம் என்றிருந்தது
கூண்டினிலேறி அது
பேசாமல் மௌனமாய் இருந்ததாம் பாரீர்
அப்போது சந்தைக்குப் போனதோர் செட்டியார் வந்தாராம்
சந்தோஷமாகவே வீட்டில் நுழைந்தாராம்
வந்தவுடன் செட்டி பிள்ளையைக் கேட்டாராம்
வரவில்லை பையனும் பள்ளிக்குச் சென்றானே
என்று சொன்னாளாம் அவர்
சரிதானென்றெண்ணி ஸ்நானம் செய்தாராம்
பிறகு கிளிப்பிள்ளை இடம்வந்து ஏமிரு என்றாராம்
குமாருடு சச்சு போயிற்று என்றதாம்
பழிகாரி முண்டையை பிடித்துக்கொள் ளென்றதாம்
பலவிதகவனமாய் பள்ளிக்குச் சென்றாரே
அனியாயம் பாரீர்

வசனம்.

ஸ்கூலில் சங்கைசெட்டியார் உபாத்தியாயரை விசாரிக்க மூன்றுநாளாய் பையன் வரவில்லை என்று தெரிவித்தார். உடனே ஏதோ மோசம்போய்விட்டதென்று அறிந்து கிளியைத்தான் சரியாய் விசாரிக்கவேண்டுமென்று வருகிறார்.

# நொண்டிச்சிந்து.

துடியிடை மாமயிலே நல்ல
தூங்காமணி விளக்கே பாங்காகக்கேள்
பிங்கள வருடமதில் தங்கமே
திங்களென்ற கிழமையில் காலையிலே
கிளிக்கூண்டைக் கையிலெடுத்து செட்டியார்
நடையுடன் கடைவீதி நுழைவதுடன்
பழமதை தான் வாங்கி தெலுங்கு
பாஷையினால் பேசிக்கொண்டு ஆசையுடனே
கொடுக்குமோர் வேளையிலே கிளிப்பிள்ளை
சலிப்புடனே நடந்ததை வெளிப்படுத்த
எண்ணங்கள் மிகக்கொண்டு அன்னக்கிளி
ரங்கய்யசெட்டியாரே திரங்கவென்று
வெளியினிலோடி வந்து குமஸ்தா
மட்டிப்பையல் கிருஷ்ணனும் ஒட்டமாய் வந்து
தட்டினான் வீட்டுக்கதவை உடனே
நடைதனிற் கனகம்மாள் ஓடிவந்து
கதவையும் திறந்துவிட்டாள் இருவரும்
மறைவாகப் படுக்குமோர் அறையில் சென்று
இருக்குமோர் வேளையிலே லக்ஷ்மணன்
பக்ஷணங்கள் செய்வதற்கு தக்ஷணம் வந்து
தாயாரைக் காணோமென்று பிள்ளையவன்
தையலரைத் தேடிக்கொண்டு வெய்யலில் வந்து
அலைகுமோர் வேளையிலே மாதவளும்
குமஸ்தாவை தனியாக மூலையிலே குமியவைத்து
துணியினால் தான்மூடி கிருஷ்ணனை
தெரியாததோர் மூலையிலே ஒளித்துவைத்து
வெளியினி லோடிவந்து பாலகனை
வாடாமகனேயெனத் தேடியழைத்து
அன்னமது தான்படைத்தாள் பிள்ளையவன்
எண்ண சில எண்ணம்பல எண்ணியேகொண்டு
அன்னையுடன் பேசினவனை நாமும்
அறிந்துகொள்வோம் சற்று தெரிந்துகொள்வோம்
என்றிவன் ஓடிவந்து வீட்டினில்
நுழைந்துவிட்டான் துணியைத் திறந்துவிட்டான்
குமஸ்தாவைக் கண்டுவிட்டான் பிள்ளையவன்
அயர்ந்தொரு விருக்ஷம்போல் நின்றுவிட்டான்
தலையையுங் குனிந்துகொண்டு என்னுடைய
தந்தையர்வந்தவுடன் விந்தையைச் சொல்வேன்

என்றுபெருங் கோபத்தால் பேச கிருஷ்ணன்
ரோசமுடன் வீச ஒரு கத்தி யெடுத்து
தொண்டையினி லோங்கிக் குத்த பாலகனும்
சண்டையிடச் சக்தியற்று உயிரை விட்டான்
கனகம்மாளோடிவந்து பாலகனை
நீளமான பிரவடை யோரமதிலே
கோலமுடன் பள்ளம் விடுத்து லக்ஷ்மணனை
சாகப்புதைத்தாளென் மனம் நோகப்புதைத்தாள். (துடி)

## கும்மி.

நடந்தசேதியெல்லாம் சொன்னவுடன் கிளிக்
கூண்டையுஞ் செட்டியார் எடுத்துக்கொண்டு
நல்ல குணமுள்ள ரெங்கையசெட்டியார்
மெல்ல நடந்தவர் ஏதுசெய்தார்

வீட்டினில் கூண்டையும் வைத்தாராம் போலீஸ்
காட்டையுங் கண்டு நுழைந்தாராம்
ஏட்டையுங்கண்டு உரைத்தாராம் எங்கள்
வீட்டுக்கு வாவென்றழைத்தாராம்

என்ன செய்தியென்று ஏட்டுகேழ்க்க அவர்
எங்குமில்லாத் துயரத்தைக் கொண்டு
அன்னீதமாகவே பிள்ளை கழுத்தை
அறுத்துப் புதைத்தாரே யென்றழுதார்

சொன்னதைக் கேட்டதும் ஏட்டுடன் சேவகர்
சூழ்ந்துகொண்டார் எமதூதரைப்போல்
கொன்றவரைக்காண்பியென்று சொல்லியவர்
கூடத்தொடர்ந்தாராம் நேசர்களே

வீட்டினில் வந்து நுழைந்தாராம் கிளி
கூண்டையுந் திறந்துவிட்டாராம்
ஓட்டமாயோடிப் புழக்கடையிற் கிளி
கால்களால் தோண்டுதாம் நேசர்களே

காலினால் மண்ணையுந் தோண்டிடவே கூட
வந்த சேவகருஞ் சூழ்ந்திடவே
மண்ணுக்குள் பள்ளம் தோண்டிப் புதைத்திட்ட
அந்தப் பாலனைக்கண்டாராம் நேசர்களே

பாலகனைக்கிளி பார்த்துவிட்டுப் பின்னால்
கடைதனில் குமஸ்தாவைக் காட்டிவிட்டு
கள்ளச்சிரிக்கி கனகத்தைப் பார்த்ததும்
கத்துது மூக்கினால் கொத்துதுபார்

பாவி குமஸ்தாவின் ஆவியைப் போக்கிட
கூட வந்த சில சேவகரும்
தாவிப்பிடித்தங்கே விலங்கையும் பூட்டிட
கூவி அழுகிறான் நேசர்களே

இருவரையுங் கூட்டிக் கொண்டுவந்து பெரும்
விலங்கையுங் கைதனிற் பூட்டிவிட்டு
தர்மதுரைமுன்னே கொண்டுவந்து கும்மா
குத்துகள் குத்தினார் நேசர்களே

மாண்டபிள்ளையை டாக்டர் பார்த்தார் அதை,
தோண்டின பள்ளத்திற் போட்டாராம்
ஆண்டவனைப்போல ஜட்ஜியெதிரினில்
அனியாயக் கேசை விளம்பலுற்றார்

பிள்ளையைக்கொன்ற பெரும்பாவி இவள்
பெருத்த மோச சமுசாரி
பருவமுள்ள அந்தப் பாலனைக் கொன்றதைக்
கண்டவருண்டோ முன் சொல்லுமென்றார்

ஜட்ஜியுஞ் சொன்னதைக் கேட்டுக்கொண்டு கிளி
தக்ஷணம் கூட்டையும் விட்டிறங்கி
சாக்ஷியுஞ் சொல்லுவேன் ஈஸ்வரன் ஆணைமேல்
கேசையுந் தீருங்கள் ஜட்ஜியாரே

## ஆச்சரியம்! என்ன? ஆச்சரியம்!

### ஜட்ஜியிடம் கிளிப்பிள்ளை சாக்ஷி சொல்லியது,

ஆசியா ஆப்ரிக்கா என்ற மெட்டு.

1. ஐயாபெரியோரே ஜட்ஜி
மெய்யென் கிளி வார்த்தையைக் கேள்
வைபோகமாய் வாழ்ந்திருக்கும் நாளையில்
மணி பனிரெண்டிருக்குமொரு வேளையில்

2, செட்டியில்லா வேளையிலே
மட்டி குமஸ்தாவும் வந்து
கட்டியிருவரும் கூடி ஆடினார்
பையன் தாயாரையுங் காணமென்று தேடினான்

3. பள்ளிக்குச் சென்றுவந்த
பாலகனைக் கண்டுவிட்டு
கொல்லவேண்டுமென்று கத்தி தீட்டினுள்
பையன் வீட்டில் வந்து குந்தியவன் சாப்பிட்டான்

4. சாப்பிட்டதோர் பையனையும்
தோப்புக்குள்ளே வாடா என்று
கூப்பிட்டாள் கலகம்மாளும் ஓசையாய்
பையன் போனுனே புழக்கடைக்கு ஆசையாய்

5. ஆசைகொண்டு போகையிலே
பாசமுள்ள குமஸ்தாவும்
ரோஷமுள்ள பாவி இவன் ஓடியே
கத்தி எடுத்துப்போட்டான் கழுத்தைத் தேடியே

6. கத்தியதைப் போட்டவுடன்
மட்டிமுண்டை இவள் கூடி
காலினுல் எட்டியுதைத்துத் தள்ளினுள்
பின்னுல் கபடு நேராதென்று எண்ணினுள்

7. எண்ணியிருக்கும் வேளையிலே
ஈஸ்வரன் தயவினுலே
எங்கள் எஜமானன் செட்டி வந்திட்டார்
நான் எடுத்துரைத்த வார்த்தைகண்டு நின்றிட்டார்

8. கிளிப்பிள்ளை வாக்குமூலங் கேட்டிருந்த
ஜட்ஜிமுதல் கீர்த்தியாகவே யாவரும்
நம்பினுர் கூடவந்த ஜனங்
களி லொருவர் தும்பினுர்

## கு ம் மி.

1. ரங்கா கிளி சாக்ஷி சொன்னவுடன்
ஜட்ஜி பங்கப்படுத்தவே வேணுமென்று
அங்கே வந்திருக்கும் இன்ஸ்பெக்டரிடத்தில்
அதிகக்கோபமாய்ச் சொல்லுகிறுர் பார்

2, பிள்ளையைக் கொன்ற பெரும்பாவி யிவள்
பெருத்த மோச சமுசாரி கள்ள
முண்டையவளைக் கூட்டிக் கொண்டுவந்து
காலினு லெட்டி யுதையுமென்றுர்

3. தூர்நாற்றக் குழிதன்னில் தள்ளுமையா
இவளை நலமுடன் கால்களில் மிதியுமையா
கலவரமில்லாமல் கள்ளியைக் கொண்டுபோய்
கரும்புள்ளி செம்புள்ளி குத்துமென்றுர்

4. கரும்புள்ளி செம்புள்ளி குத்திவிட்டு
பின்னால் கழுதைமேல் ஏற்றி யிருவரையும்
செருப்பு முறத்தா லடித்துக்கொண்டு
அந்த தெருவெல்லாஞ் சுத்துங்கள் நேசர்களே

5. பிள்ளையைக் கொன்ற பெரும்பாவி
இவள் பெருத்த மோச சமுசாரி
மருவுயிர் போக்கிட வேண்டாமய்யா
அந்த மாது கைகால்களை வாங்குமென்றார்

6. மாது கைகால்களை வாங்கிவிட்டு
இந்த தடியனைப் பஸ்றாவுக் கேத்திவிட்டு
ஜனங்களையெல்லாந் துரத்திவிட்டு
கேட்டுக் கதவையும் மூடியே வாருமென்றார்

7. சாக்ஷிகள் சொன்ன கிளிப்பிள்ளையை
அந்தச் சர்க்காரில் வைக்கவே வேணுமென்று
மாட்சிமை தங்கிய ஜட்ஜியுஞ் சொல்லவே
சூக்ஷமாய்ச் செட்டியார் ஏதுசெய்தார்

8. எல்லாத் தனத்தையும் கர்லினம்செய்து
தக்க காவித்துணியைத் தரித்துக்கொண்டு
தலைவிதி இவ்வாறு என்றுசொல்லி
வேடம்பூண்டாராம் செட்டியார் ஆண்டியைப்போல

9. பாவியுடகதை தீர்ந்ததையா
இதைப் படித்தவர் வாய்கூட நோகுதய்யா
ஆவியைப் போக்கிட வேண்டாமய்யா
பெண்கள் ஆசையும் வையாதீர் நேசர்களே

10. கருமியுடகதை காணவேணுமென்று
காருலகில் ஜனம் கேட்டதினால்
சிறுமணலூர் முனிசாமி சீடனிதை
சிந்தாகப் பாடியே அச்சடித்தார்.

சுபம்! சுபம்!! சுபம்!!!